கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 21.08.2025.

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

**அசல் வழக்கு எண். 140/2019**

2025-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமாட்சி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | கோதண்டம் | வயது | : | 50 |
| ஊர் | : | கீழ்புதூர் | தொழில் | : | கூலி |

**வா.சா.1 (காமாட்சி) 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

என்ன படித்தீர்கள் என்றால் நான் படிக்கவில்லை. ஆனால் கையொப்பம் மட்டும் இடுவேன். இந்த வழக்கானது எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்று தெரியுமா என்றால் தாவா சொத்தில் பாகம் கோரி தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி குமார் என் அண்ணன் என்றால் சரிதான். 2,3,4 பிரதிவாதிகள் ஆன சங்கீதா, பிரியா மற்றும் சத்யா ஆகியோர் 1ம் பிரதிவாதி குமார் என்பவரின் மகள்கள் என்றால் சரிதான். மேற்படி 4ம் பிரதிவாதியான சத்யா என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் எத்தனை வருடங்களுக்கு முன்னர் என்று தெரியுமா என்றால் சுமார் 2 வருடங்கள் இருக்கும். வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் மேற்படி சத்யா இறந்தார் என்றால் சரிதான். சத்யா என்பவர் திருமணம் ஆனவரா என்றால் அவர் திருமணம் ஆனவர், அவருக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். மேற்படி சத்யா என்பவர் இறந்துவிட்டபடியால் அவருடைய வாரிசுகளை சேர்க்கவேண்டிய நடவடிக்கை எடுத்துள்ளீர்களா என்றால் அவர்கள் குழந்தை என்பதால் அவர்களை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. மேற்படி குழந்தைகள் இருவரும் யாருடைய பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் இருந்து வருகிறார்கள் என்றால் 1ம் பிரதிவாதியான குமார் என்பவரின் பராமரிப்பில் இருந்து வருகிறார்கள். 7ம் பிரதிவாதி கங்காபாய் என்பவர் என் தாயார் என்றால் சரிதான். எனக்கு திருமணமாகி எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால் சுமார் 40 வருடங்கள் இருக்கும். எனது தாயார் கங்காபாய் என்பவர் 03.08.2011 ம் தேதியில் செட்டில்மெண்ட் ஆவணம் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியது எப்போது தெரிய வந்தது என்றால் ஆவணம் ஏற்படுத்தி ஒரு 6 மாதங்கள் கழித்து எனக்கு தெரிய வந்தது. 5ம் பிரதிவாதி எல்லம்மாள் என்பவர் என்னுடைய அக்கா என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு என் தாயாரால் எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தானது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்தானது மூதாதையர் சொத்தோ அல்லது கிரையம் பெற்ற சொத்து இல்லை என்றால் என் அம்மா வாங்கிய சொத்து ஆகும். அதன் பிறகுதான் அரசாங்கம் அவர்களுக்கு பட்டா வழங்கியது. மேற்படி என் தாயார் கிரயம் பெற்ற

சொத்து என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் என் வசம் இல்லை பிரதிவாதிகளிடம் உள்ளது. 1ம் அயிட்ட சொத்தானது 1 முதல் 4 பிரதிவாதிகள் பிரித்துக்கொள்ளுங்கள் எனவும், 2ம் அயிட்ட சொத்தை பொறுத்தவரை நானும் எல்லம்மாளும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று தாயார் சொன்னார்கள் என்றால் என்னிடம் எதுவும் சொல்லவில்லை. மேற்படி என் தாயார் கூறியதை மறைத்து நான் இவ்வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி 6 மாதங்களுக்கு பிறகு தெரிய வந்தது என்றும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னால் வேறு ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அதன் பிறகு 16.03.2019 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்டதா என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டபிறகு தாயார் கங்கம்மாள் என்பவர் அனைவரையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார் என்றால் சரிதான். மேற்படி பேச்சு வார்த்தை நடைபெறும்போது நானும் கூட இருந்தேனா என்றால் சரிதான். மேற்படி பேச்சு வார்த்தையில் என்ன நடைபெற்றது என்று தெரியுமா என்றால் நாங்கள் மூவரும் சொத்துக்களை பிரித்துக்கொள்ளுங்கள் என்று கூறினார். ஆனால் என் அண்ணனான 1ம் பிரதிவாதியும், 5ம் பிரதிவாதியான என் அக்கா எல்லம்மாளும் எதுவும் கூறவில்லை. அதன் பிறகு என் அம்மா இறந்துவிட்டார். மேற்படி பேச்சு வார்த்தையில் 1ம் அயிட்ட சொத்தினை என்னுடைய சம்மதத்தின் பேரில்தான் 1ம் பிரதிவாதிக்கும் அவருடைய மகள்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது என்றும், 2ம் அயிட்ட சொத்தை பொறுத்தவரை நானும் என் அக்கா எல்லம்மாளும் எடுத்துக்கொள்ளுங்கள் என்று என் தாயாரால் அறிவுறுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்து நடந்தபோது 2011ம் வருடம் ஏற்படுத்திக்கொண்ட செட்டில்மெண்ட் ஆவண சொத்தை பொறுத்தவரை 3 பேரும் பங்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டது என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதியான என் அக்கா எல்லம்மாள் என்பவர் தன்னுடைய ஒரே மகனான 6ம் பிரதிவாதிக்கு 2009ம் வருடம் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திய விவரம் நன்கு தெரிந்தும் அதை மறைத்தும் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல, எனக்கு செட்டில்மெண்ட் ஏற்படுத்திய விவரம் தெரியாது. என் அப்பா இறக்கும்போது எனக்கு என்ன வயது இருக்கும் என்று தெரியுமா என்றால் என் அப்பாவை எனக்கு தெரியாது. அப்பொழுது என் அண்ணனான 1ம் பிரதிவாதிக்கு என்ன வயது இருக்கும் என்று தெரியுமா என்றால் சின்னகுழந்தையாக இருந்தார். மேற்படி 1ம் பிரதிவாதிதான் எனக்கும் என் அக்காவிற்கும் சவரட்சனை செய்து திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் என் அம்மாதான் மூவரும் செய்து வைத்தார். என் அண்ணனும் கூட இருந்தார். என் அம்மா அரசாங்கத்தில் ஏதேனும் வேலை செய்தாரா என்றால் இல்லை. எனக்கும் என் அக்காவிற்கும் திருமணம் ஆனபிறகுதான் என் அண்ணா திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். என் அண்ணன்தான் எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்பதை மறைத்தும் என் தாயார்தான் எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தாயார்தான் எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார். நான் இருக்கும் ஊருக்கும் என் அண்ணன் இருக்கும் ஊருக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 20 கிலோ மீட்டர் இருக்கும். என் தாயாரை அவர் இருக்கும் வரையில் என் அண்ணன்தான் பார்த்துக்கொண்டார் என்றால் இல்லை. என் அம்மா தனியாகத்தான் இருந்தார். நாங்கள் மூவரும் அடிக்கடி சென்று

அவரை பார்த்துக்கொள்வோம். மேற்படி தாவா சொத்தானது 1ம் பிரதிவாதிக்கும் அவருடைய மகளுக்கும் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் அரசாங்கத்தால் என் தாயாருக்கு வழங்கப்பட்ட சொத்து என்பதால் அதில் உரிமை கோரவோ, ஆட்சேபிக்கவோ தகுதியில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி 2011ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி 6 மாதங்கள் கழித்து தெரியவந்தது என்று சொல்லியுள்ளதால் இவ்வழக்கானது காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி என் தாயாரால் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லும் என்றும் அதனால் நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கானது செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
செய்யாறு